1970 டிசம்பர் 2]

THIRU B. VENKATASWAMY: From the answer given by the Hon. Minister it is stated that there is a package scheme in Hosur taluk. But actually only 500 or 600 acres have been cultivated there. There is great potentiality to increase the acreage under tobacco, a crop which gets us dollars.

So will this Government think of extending the acreage to 2000 or 3000 acres?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஹோசூரில் மத்திய அரசாங்கத்தின் உதவியோடு செயல்பட்டு வருகிறது. அங்கே கிட்டத்தட்ட 501 ஏக்கர் அளவில் புகையிலைப் பயிரிடப் படுகிறது. எனவே, மாநில அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு பரிந்துரை செய்து ஒப்புக்கொண்ட பிறகு மேலும் பல ஏக்கர்களுக்கு நீட்டிக்க அக்கறை எடுத்துக்கொள்ள முடியும் என்று மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. ஜார்ஜ்: தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் சப்-தாலூக்காவில் அதிகப்படியாக புகையிலை பயிரிடப் படுகிறது. எனவே, அங்கே பாக்கேஜ் ஸ்கீமை விஸ்தரிக்க இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தற்பொழுது இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், கோவை மாவட்டம், வடார்க்காடு மாவட்டம் போன்ற மாவட்டங்களில் பல இடங்களிலே ஏராளமாக புகையிலை விவசாயம் செய்யப்பட்டு வந்தது. இப்பொழுது மிகவும் குறைந்துள்ளதற்குக் காரணம், மத்திய சர்க்கார் அந்த விவசாயிகளுக்கு, வரி போட்டு பலவிதத்திலேயும் தொல்லை கொடுப்பதனால்தான் விவசாயிகள் ஊக்கத்தோடு விவசாயம் செய்வதற்கு அஞ்சுகிறார்கள் என்பது கனம் அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? இது விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள அதிகப்படியான முயற்சி செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்தக் குறைகளை எடுத்துச் சொல்கிறார்கள். ஆனால் புகையிலை சாகுபடி செய்யும் விவசாயிகள் அப்படிப்பட்ட குறைகளைச் சொன்னதாகத் தெரியவில்லை. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏதாவது குறிப்பிட்ட குறைகளை எடுத்துச் சொன்னால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

கோவை மாவட்டத்தில் பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரம்

* 88 வினா.—திரு. ஈ. எம். நடராசன்: மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பவானி வட்டத்தில் உள்ள பர்கூர் கிராமத்தையும், கோபி வட்டத்தில் உள்ள கடம்பூர், குதியாலத்தூர், குன்றி ஆகிய கிராமங்களையும் இணைத்து ஒரு Tribal Block அமைக்க ஏதேனும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. ஈ. எம். நடராசன் : பவானி வட்டத்தில் உள்ள பர்கூர் கிராமமும், கோபி வட்டத்தில் உள்ள கடம்பூர், குதியாலத்தூர், குன்றி ஆகிய கிராமங்களும் மலைப்பகுதியில் இருக்கின்றன. பழங்குடி மக்கள் அதிகமாக வாழுகின்ற அந்தப் பகுதியில் இதுவரை அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை. அரசு தனிக் கவனம் செலுத்தி அந்தப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கான வழி வகைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வி பழங்குடி வட்டார வளர்ச்சித் திட்டத்தை அமலாக்குவது பற்றி. அதற்கு இல்லையென்று பதில் சொன்னேன். அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனை பரிசீலிக்கப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு தனி நிர்வாக அமைப்பு

* 89 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களை மாவட்ட அளவிலும், கோட்ட அளவிலும் தனி நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டு வரும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : ஊராட்சி ஒன்றியங்களை மாவட்ட அளவில், கோட்ட அளவில் தனி நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர வேண்டுமென்று முருகேச முதலியார் பரிந்துரையில் கூறப்பட்டி ருந்தது பற்றி அரசு பரிசீலித்து எப்போது முடிவு எடுக்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசின் பரிசீலனையில் இருக் கிறது. விரைவில் முடிவு அறிவிக்கப்படும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : யோசித்துக் கொண்டிருப்ப தாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாநில ரீதியில் இருந்து கீழே பஞ்சாயத்து வரையில் தனி டிபார்ட்மெண்டாகச் செயல் படுத்தும் முறையில் ரெவின்யூ இலாகா குறுக்கீடு இல்லாமல் அமைக்க நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினர் குறிப்பிட்ட யோசனையும் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப் படும்.